செ.வெ.எண்: 160/2020 நாள்: 20.03.2020

**திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கொரோனா வைரஸ் 24 மணி நேரம் செயல்படும் கட்டுப்பாட்டு அறை மாவட்ட ஆட்சித் தலைவர் திறந்து வைத்தார்...**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக தரை தளத்தில் செயல்பட்டு வரும் பேரிடர் மேலாண்மை அலுவலகத்தில் 24 மணி நேரம் செயல்படும் கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு அறையினை இன்று (20.03.2020) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள் திறந்து வைத்தார். மேலும், மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் தூய்மை காவலர்களுக்கு கிருமினி நாசினி தெளிப்பான் கருவிகள் வழங்கி, மாவட்ட ஆட்சியரக அலுவலகங்களில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பொ. இரத்தினசாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. பா. ஜெயசுதா, துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மரு. மீரா, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. ஆனந்த்மோகன், இ.ஆ.ப., துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி. மந்தாகினி, மருத்துவர்கள், அரசு அலுவலர்கள், தூய்மை காவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் சுகாதாரத் துறையுடன் மாவட்ட நிர்வாகம், வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பேரூராட்சிகள் துறை, நகராட்சி நிர்வாகம் உட்பட துறைகள் இணைந்து பல்வேறு கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. இதன் அடிப்படையில் இன்று மாவட்ட ஆட்சியரக வளாக தரை தளத்தில் செயல்பட்டு பேரிடர் மேலாண்மை அலுவலகத்தில் 24 மணி நேரம் செயல்படும் கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு அறை மாவட்ட ஆட்சியர் அவர்களால் திறக்கப்பட்டுள்ளது. இந்த கட்டுப்பாட்டு அறையில் மருத்துவ அலுவலர், காவலர், பேரிடர் மேலாண்மை துறை அலுவலர் என மூன்று நபர்கள் சுழற்சி முறையில் 24 மணி நேரம் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள். இக்கட்டுப்பாட்டு அறையினை 24 மணி நேரமும் 1077, (04175) 232377 ஆகிய எண்ணகளில் தொடர்பு கொண்டு பொதுமக்கள் கொரோனா வைரஸ் தொடர்பான விவரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

இதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் திருவண்ணாமலை நகராட்சி அலுவலகத்தில் ஒருங்கிணைந்த பேரிடர் மேலாண்மை மையம் சார்பாக நடைபெற்ற கொரோனா வைரஸ் விழிப்புணர்வு முகாமினை துவக்கி வைத்து, கை கழுவும் முறைகள் குறித்த செயல்விளக்கம் தூய்மை காவலர்களுக்கு அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியல், திருவண்ணாமலை நகராட்சி ஆணையாளர் திரு. நாகேந்திரன், நகராட்சி பொறியாளர், நகராட்சி பணியாளர்கள் மற்றும் தூய்மை காவலர்கள் கலந்து கெர்ண்டனர். முன்னதாக திருவண்ணாமலை நகராட்சி அலுவலக வளாக நுழைவு வாயிலில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தனது கைகளை கழுவி பின்னர் கூட்டத்திற்கு வருகை புரிந்தார்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் விழிப்புணர்வு முாகமில் பேசியதாவது 'தூய்மை பணிகளில் அனைவரும் பயன் அடைய வேண்டும் என பணியாற்றி வருகிறீர்கள். எந்த நோயும் நம்மை பாதிக்காது என அலட்சியமாக இருக்கக் கூடாது. சீனா நம்மை காட்டிலும் தொழில், பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடாகும். கொரோனா வைரஸ் முதல் தாக்குதல் அங்கு நிகழ்ந்துள்ளது. காச நோய், தொழு நோய், எய்ட்ஸ் நோய் ஆகிய நோய்களை காட்டிலும் கொடுமையான நோய் கொரோனா நோயாகும். நம் வாழ்க்கை, வாழ்வாதாரத்தில் தினந்தோறும் தூய்மை கடைபிடிக்க வேண்டியது அவசியம். உலகளவில் பயங்கரமான அச்சுறுத்தல் சூழ்நிலை இருந்தாலும் நாம் ஆரம்ப கட்டத்தில் தான் இருக்கிறோம். நீங்கள் ஆரோக்கியமாக முதலில் இருப்பதன் அவசியம் கருதி, உங்களுக்கு இன்று தூய்மை பயிற்சி அளிக்கப்டுகிறது.

உலகளவில் கொரோளா வைரஸ் காரணமாக பல நாடுகளில் பொருளாதாரம் பாதிப்படைந்துள்ளது. அமெரிக்காவில் உள்ள நியூயார்க், சான்பிரான்சிஸ்கோ போன்ற மாகாணங்கள் முற்றிலும் மூடப்பட்டுள்ளது. தினந்தோறும் அடிக்கடி கை கழுவ வேண்டும். நோய் எதிர்ப்பு சக்தியை உள்ளவர்களைவிட, அதிகமான சக்தியுடன் கொரோனா நோய் தாக்குகிறது. வணிக வளாகங்கள், பள்ளி, கல்லூரிகள், வழிபாடுகள் மூடப்பட்டிருப்பது, பேருந்துகள் குறைக்கப்பட்டிருப்பது இது வரை நாம் பார்த்ததில்லை. கொரோனா வைரஸ் தாக்குதலின் போது சீனாவில் உள்ள பெரிய அடுக்குமாடி குடியிருப்பு வளாகங்கள் சீல் வைக்கப்பட்டது, அங்கு வசிப்பவர்களுக்கு தேவையான அத்திவாசிய பொருட்கள், மருந்துகள் மட்டும் வழங்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் நோய்க்கு மருந்து தேடுவதை காட்டிலும், தடுப்புது மற்றும் பாதுகாப்பாக இருப்பது தற்போது முதல் அவசியமான ஒன்றாக உள்ளது' என்றார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**